DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No.15/2024**

Deposition of witness for Prosecution அ.சா.4

| | |
|---|---|
| Name | : ஸ்டீபன் |
| Father/ Husband Name | : சேவியர் |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : |

எதிரி ஆஜர்

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 08.09.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தற்போது முள்ளிக்குண்டில் குடியிருந்து ஓட்டுநராக வேலை செய்கிறேன். எதிரியை தெரியும். அ.சா.1 யை தெரியாது. போலீஸ் என்னை கையெழுத்து போடச் சொன்னார்கள். நான் போட்டேன். பிரச்சனை பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

**(அரசுத் தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கக் கோரி அனுமதி கேட்டதன் பேரில் இந்நீதிமன்றத்தால் அனுமதி வழங்கப்பட்டது).**

**அரசுதரப்பில் குறுக்கு விசாரணை:**

1. கடந்த 30.11.2023-ம் தேதி ஆறாவயல் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் விசாரணை செய்த போது கடந்த 25.11.2023-ம் தேதி மாலை 05.00 மணிக்கு ஆனந்தா காலேஜ் பின்புறம் அ.சா.1னின் ஆடுகளை எதிரி பிடித்து சென்றதாகவும் தடுத்த அ.சா.1யை எதிரி கையால் அடித்து அசிங்கமாக திட்டி கொலை மிரட்டல் செய்ததாக சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: இல்லை.**

**மறு விசாரணை :** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்,
தேவகோட்டை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No.15/2024**

Deposition of witness for Prosecution அ.சா.5

Name : ஆரோக்கியதாஸ்
Father/ Husband Name : ஞானப்பிரகாசம்
Village :
Taluk :
Calling :
Age :

எதிரி ஆஜர்

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 08.09.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தற்போது இலுப்பக்குடியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 30.11.2023-ம் தேதி ஆறாவயல் காவல் நிலைய போலீசார் முள்ளிக்குண்டில் கூட்டமாக நின்றார்கள். நான் கூட்டமாக இருந்ததால் போய் பார்த்தேன். நான் கேட்ட போது அந்த இடத்தில் சண்டை நடந்ததாக சொல்லி அதற்கு சாட்சி கையெழுத்து போட வேண்டும் என்று சொல்லி என்னிடம் கேட்டார்கள். நான் போட்டுக் கொடுத்தேன். ஏ்ன்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். **(மேற்படி பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தார்கள். காவல் நிலையம் வரச் சொல்லி கையெழுத்து போடச் சொன்னார்கள். நான் போட்டேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதி இருந்தது என்று நான் படித்து பார்க்கவில்லை என்றால் சரிதான். போலீசார் என்னிடம் வெற்று பேப்பரில் தான் கையெழுத்து வாங்கினார்கள்.

**மறு விசாரணை :** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்,
தேவகோட்டை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No.15/2024**

Deposition of witness for Prosecution அ.சா.6

Name : ஆரோக்கியசாமி
Father/ Husband Name : பிரான்சிஸ்
Village :
Taluk :
Calling :
Age :

எதிரி ஆஜர்

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 08.09.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தற்போது முள்ளிக்குண்டில் குடியிருந்து பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 மற்றும் எதிரியை தெரியும். கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் மதியம் 03.00 மணியளவில் நான் துாங்கிக் கொண்டிருந்த போது வெளியில் சத்தம் கேட்டது. நான் எழுந்து வந்து பார்த்த போது எதிரி அ.சா.1-னிடம் ஏன் இங்கு வந்து ஆடு மேய்க்கிறீர்கள், காலையில் தானே காவல் நிலையத்தில் எழுதிக் கொடுத்து வந்தீர்கள் என்று சொல்லி வாய்த்தகராறில் ஈடுபட்டார். அதன் பிறகு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. நான் உள்ளே வந்துவிட்டேன். மறுநாள் போலீஸ் வந்து இந்த இடத்தில் தானே சண்டை நடந்தது என்று கேட்டு படம் வரைந்தார்கள்.

**(அரசுத் தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கக் கோரி அனுமதி கேட்டதன் பேரில் இந்நீதிமன்றத்தால் அனுமதி வழங்கப்பட்டது).**

**அரசுதரப்பில் குறுக்கு விசாரணை:**

1. கடந்த 30.11.2023-ம் தேதி ஆறாவயல் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் விசாரணை செய்த போது கடந்த 25.11.2023-ம் தேதி மாலை 05.00 மணிக்கு ஆனந்தா காலேஜ் பின்புறம் அ.சா.1னின் ஆடுகளை எதிரி பிடித்து சென்றதாகவும் தடுத்த அ.சா.1யை எதிரி கையால் அடித்து அசிங்கமாக திட்டி

கொலை மிரட்டல் செய்ததாக சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.</u>**

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்,
தேவகோட்டை.